முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

OS 124/2023

2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 06ஆம் நாள் வா.சா.2–ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி. .ஜி.சுபத்திரா தேவி, எம்.எல்., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தங்கமணி | வயது | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | வெங்கடேசன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை–**

பிரமாண வாக்குமூலத்தினை நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். ஜனவரி மாதம் 20 லட்சம் வாங்கியதகா சொல்லியுள்ளதை நான் பார்த்தேனா என்றால் என் முன்னிலையில் தான் வாங்கினார்கள் நான் பார்த்தேன். என்ன நோட்டுக்களாக, எத்தனை கட்டுகளாக கொடுத்தார்கள் என்றால் பணம் வாங்கியதை பார்த்தேன், நோட்டுக்களை பார்க்கவில்லை. சுமாராக எத்தனை கட்டுகள் பணம் என்று தெரியாது. 5 மாதம் கழித்து 20 லட்சம் பணம் வாங்கியதையும் நான் பார்த்தேன். அதுவும் என்ன நோட்டு, எத்தனை கட்டுகள் என்று நான் பார்க்கவில்லை. இரண்டு முறையும் நான் கையெழுத்து போட செல்வதற்கு முன்பு வீட்டில் சித்ரா, கோமதி, பாண்டு எழுதியவர்கள் இருந்தார்கள்.

நான் போன பிறகு அவர்கள் சொன்னார்கள், நான் பணம் வாங்கிவிட்டேன் என்று சொன்னார்கள். பணம் கொடுத்ததையும் பணம் வாங்கியதையும் நான் நேரடியாக பார்க்கவில்லை. பணம் வாங்கிவிட்டதாக சொன்னார்கள். பாண்டில் 1 ஸ்டாப் தான் ஒட்டப்பட்டிருந்தது. பத்திரம் எழுதியவர் பெயர் பாலசுப்ரமணியம். நான் போவதற்கு முன்பே பத்திரத்தினை எழுதி வைத்திருந்தார்கள். நான் போகும் போது பணம் வாங்கியவர் கையெழுத்து போட்டிருந்தார் முதல் சாட்சியாக நான் கையெழுத்து போட்டேன். என்னை வாதி தான் சாட்சி கையெழுத்து போட வர சொன்னார். இது அனைத்தும் சித்ரா வீட்டில் தான் நடந்தது. பாண்டு பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டதாக சொல்வது பொய் என்றாலும், வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல. போலிசார் மூலம் பிரதிவாதி கோமதியை மிரட்டி வாங்கப்பட்ட பாண்டு பத்திரத்தில் பின்னிட்டு சாட்சி கையெழுத்தை போட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.